# சுந்தரம்

அல்லது

# தைரியமே ஜயம்


க. இராமநாதப் பிள்ளை

*(Tamil Pandit, Presentation Convent, Royapuram, Madras)*


இயற்றியது

(துரைத்தனத்தார் அங்கீகரித்தது)


OFFICE OF THE REGISTRAR
No.
26 FEB 1929
MADRAS



1929



பதிப்புரிமை]


[விலை அணு 3.



16-ம் பக்கம் பார்க்க.

# சுந்தரம்

அல்லது

# தைரியமே ஜயம்

## 1. சுந்தரத்தின் இளமை

தேனு நகர் என்பது ஒரு சிறந்த நகரம். முன் ஒரு காலத்தில் அங்கு ஒரு குடியானவன் இருந்தான். அவன் சிறந்த பணக்காரன். அவனுக்கு நெடுநாள் வரையில் குழந்தையே இல்லை. அதனால், அவன் அதே கவலையுடன் இருந்தான். பின்பு அவனுக்கு ஒரு மகன் பிறந்தான். அவன் அந்தப் பிள்ளைக்கு வேண்டியவை எல்லாம் வாங்கிக் கொடுத்தான். அந்த மகன் சுந்தரமாக இருந்தான். அதனால், குடியானவன் அவனுக்குச் சுந்தரம் என்று பெயர் இட்டான். சுந்தரத்துக்கு வயது ஐந்து ஆயிற்று. அப்-

பொழுது திடீரென்று அந்தக் குடியானவனை இராக்ஷசன் ஒருவன் கொன்றுவிட்டான்.

அதன் பிறகு அவன் மனைவி வேறு ஒரு புதிய ஊருக்குப் போக நேர்ந்தது. ஆகையால், அவள் தன் அருமை மகனை இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டு மிகுந்த கஷ்டத்துடன் நடந்து போய், ஒரு குடிசையில் தங்கினாள். சாப்பாட்டுக்கு வழி இல்லை. அதனால், அவள் தன்மேல் இருந்தசில நகைகளை விற்றுச்சில சாமான்களும் ஒரு சிறு பசு மாடும் வாங்கினாள். அந்தப் பசு வெகு அழகாக இருந்தது. அதன் பெயர் கலியாணி. கலியாணியின்மேல் அவளுக்குப் பிரியம் அதிகம். அவள் அதன் பாலை விற்று ஜீவனம் செய்து வந்தாள்.

அவள் சுந்தரத்தை வெகு அருமையாய் வளர்த்து வந்தாள். அவன் அழ அவள் சகிக்கமாட்டாள்; அவன் எப்போதும் சிரித்த முகத்துடன் இருக்க விரும்பினாள்; அவன் கேட்டதெல்லாம் அவனுக்கு வாங்கிக் கொடுத்தாள். பிள்ளையின் அருமை யாருக்குத் தெரியும்? பெற்றவளுக்குத்தானே தெரியும்? அதனால், அவள் செய்தது ஒன்றும் ஆச்சரியம் அல்லவே?

இவ்விதம் அவன் தாய் செல்வமாக வளர்த்தபடியால், சுந்தரம் முழுச் சோம்பேறி ஆய்விட்-

டான். வீட்டை விட்டு வெளியே போக அவனுக்கு விருப்பம் இல்லை. அவன் ஒரு வேலையும் செய்யமாட்டான்; மூன்று வேளையும் நன்றாய்ச் சாப்பிடுவான்; மற்ற வேளையில் தூங்குவான். அவன் வெகு பிடிவாதம் உள்ளவன்; முன் கோபக்காரன்; ஆனால், வெகு தைரியசாலி.

## 2. சுந்தரம் பசுவை மாங்கோட்டைக்கு மாறுதல்

இப்படித் தாயும் பிள்ளையும் சில காலம் கழித்தார்கள். பிறகு அவர்களிடம் இருந்த பணம் எல்லாம் செலவாய்விட்டது. பசு மாடுதான் மீதி இருந்தது. அந்தப் பசுவும் மரத்துப் போய்விட்டது. பிறகு அவர்களுக்கு ஜீவனத்திற்கு வேறு வழி இல்லை. அவர்கள் என்ன செய்வார்கள்? பாவம்!

ஒரு நாள் சுந்தரத்தின் தாயாகிய கமலி அவனைக் கூப்பிட்டு, "சுந்தரம், நீ சும்மா இருக்கிறாயே! இராத்திரிச் சாப்பாட்டுக்கு என்ன செய்வது? சலியாணியையாவது விற்றுக்கொண்டு வரக் கூடாதா?" என்று சொல்லிக் கதறி அழுதாள். சுந்தரம் அவன் தாயைப் பார்த்து, விசனம் அடைந்து, "அம்மா, நான் அப்படியே


R.V.R

கலியாணியைக் கொண்டுபோய் விற்றுக்கொண்டு வருகிறேன். நீங்கள் வருத்தப்பட வேண்டாம்,'' என்று சொன்னான். பிறகு அவன் பசு மாட்டை ஓட்டிக்கொண்டு அரியலூரில் கூடும் சந்தைக்குப் போனான். அவன் போகும் வழியில் ஒரு கிழத் துலுக்கனைக் கண்டு, "ஐயா, அரிய லூருக்குப் போகும் வழி எது?'' என்று கேட்டான்.

அதற்கு அந்த வழிப்போக்கன், "பையா, நீ எங்கிருந்து வருகிறாய்? அரியலூர் இன்னும் வெகுதூரம் இருக்கிறதே! இந்தப் பசுவை ஏன் அங்கே ஓட்டிக்கொண்டு போகிறாய்?'' என்று மிகவும் அன்போடு கேட்டான்.

சுந்தரம், "நான் தேனு நகரிலிருந்து வருகிறேன். நான் ஓர் ஏழைப் பையன். என் தாயார் விதவை. அவர் இந்தப் பசுவை விற்று வரச் சொன்னார். ஆகையால், இதை அரிய லூரில் கூடும் சந்தைக்கு ஓட்டிப் போகிறேன். தயை செய்து வழி காட்டுங்கள்,'' என்று வேண்டினான்.

உடனே அந்தத் துலுக்கன் சுந்தரத்தைப் பார்த்து, "தம்பி, நீ மிகவும் கெட்டிக்காரன். உன்னைப்போன்ற புத்திசாலியை நான் பார்த்ததே இல்லை. உன்னைப்பார்த்தவுடனே, ஒரு பிரபுவின் பிள்ளையென்று நினைத்தேன். குப்பையில் கிடந்தாலும், மாணிக்கம் மாணிக்கந்தான். நீ கூடிய

சீக்கிரத்தில் ஒரு பெரிய பிரபு ஆவாய். ஆனால், நான் சொல்லுகிறபடி நீ செய்யவேண்டும்,'' என்றான்.

அதைக் கேட்ட சுந்தரம், "இவர் யாரோ ஒரு பெரியவர். இவர் ஒரு தீர்க்கதரிசியாய் இருக்க வேண்டும்,'' என்று நினைத்தான்; பிறகு, "ஐயா, நீங்கள் சொல்லுகிறபடி செய்யத் தடை இல்லை. எப்படியாவது எங்களுக்குச் சாப்பாடு கிடைத்தால் போதும். நான் அதிக பணத்துக்கு ஆசைப்பட இல்லை,'' என்று அதிக ஆவலுடன் சொன்னான்.

துலுக்கன், "தம்பி, உனக்கு உண்மையாகவே ஜீவனத்துக்குக் கஷ்டம் இல்லாமல் இருக்க ஆசை உண்டா? அப்படியானால், நான் சொல்வதைக் கவனமாய்க் கேள்: நான் ஒரு மாங்கொட்டை தருகிறேன். அதற்குப் பதிலாக நீ உன் பசுவை எனக்குக் கொடுக்கவேண்டும். இந்த மாங் கொட்டையைக் கொண்டுபோய் இன்று சாயங்காலம் நடு. நாளைக் காலையில் இது ஒரு பெரிய மா மரம் ஆகும். அந்த மரத்தின் ஒரு பாகம்கொழுந்து விடும்; ஒரு பாகம் பூக்கும்; ஒரு பாகம் காய்க்கும்; ஒரு பாகம் பழுக்கும். அதனால், உனக்கு எப்போதும் பழம் கிடைக்கும். அதைக் கொண்டு நீ பணக்காரன் ஆவாய்,'' என்று சொல்லி, ஒரு மாங்கொட்டையை அவன் கையில் கொடுத்தான்.

சுந்தரம் அதிக சந்தோஷமாய் அதை வாங்கிக் கொண்டான்; பசுவைத் துலுக்கனிடம் ஒப்பித்தான்; பிறகு அவனுக்கு வந்தனம் அளித்துவிட்டு, திரும்பிப் பார்க்காமல், வெகு வேகமாய் வீட்டுக்கு ஓடினுன்.

வீட்டுக்குப் போன வுடனே, அவன் தாய் வெகு ஆசையோடு, "என் கண் மணி, சுந்தரம், கலியாணியை என்ன விலைக்கு விற்ருய்?" என்று கேட்டாள்.

சுந்தரம் உடனே, "அம்மா, இதோபாரும்!" என்று துலுக்கன் கொடுத்த மாங்கொட்டையைக் காண்பித்து, அவன் சொன்ன சங்கதிகளை யெல்லாம் அவளுக்குச் சொன்னுன்.

அவைகளைக் கேட்ட கமலி வெகு கோபத்தோடு அந்த மாங்கொட்டையை வாங்கி ஜன்னல் வழியாய்த் தோட்டத்துக்குள் எறிந்துவிட்டாள். பிறகு அவள் தன் மகனைப்பார்த்து, "என்னடா! அப்பா! இப்படிச் செய்துவிட்டாயே! வெகு நன்ருய் இருக்கிறதே நீ செய்த வேலை! அழகான பசுவைக் கொடுத்துவிட்டு, இந்தப் பிரயோசனம் இல்லாத மாங்கொட்டையை வாங்கிக் கொண்டு வந்தாயே! காலத்துக்குத்தக்கபடிதான் உனக்குப் புத்தியும் இருக்கிறது! நாம் இப்போது சாப்பாட்-

டுக்கு என்ன செய்வது?" என்று சொல்லி விசனப்பட்டாள்.

அன்று இராத்திரி தாயும் பிள்ளையும் பட்டினியாய்ப் படுத்துக்கொண்டார்கள். சுந்தரம் தன் தாய் படும் துயரத்தை நினைத்துத் தேம்பித் தேம்பி அழுதுகொண்டு இருந்து, பிறகு தூங்கிவிட்டான்.

## 3. சுந்தரமும் வன தேவதையும்

அன்று இரவு கழிந்தது. அவன் மறு நாள் காலையில் எழுந்தான். அவன் படுத்து இருந்த அறையின் ஜன்னல் திறந்து இருந்தும், அறை முழுவதும் ஒரே இருளாய் இருந்தது. அவன் அதற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்பினான். பிறகு வெகு பயத்தோடு மெதுவாக வெளியே வந்தான். அறை இருண்டு இருந்தது எதனால் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? ஜன்னலின் எதிரில் ஒரு பெரிய மாமரம்வளர்ந்து இருந்தது. அதன் கிளைகளோ, கணக்கிட முடியாதவைகள். அதன் உச்சி ஆகாயத்தில் மேகங்களால் மறைபட்டு இருந்தது. துலுக்கக் கிழவன் சொன்னபடியே, அம் மாமரத்தின் ஒரு பாகத்தில் கொழுந்தும், ஒரு பாகத்தில் பூவும், ஒரு பாகத்தில்

காயும், ஒரு பாகத்தில் பழமும் நிறைந்து இருந்தன. அந்த மரம் பார்வைக்கு வெகு அழகாய் இருந்தது. அந்த மரந்தான் சூரிய வெளிச்சம் அறையில் நுழையாதபடி தடுத்துவிட்டது. அதனால்தான் அறையில் இருள் பாவி இருந்தது.

அதைக் கண்டதும் சுந்தரம் வெகு ஆச்சரியப்பட்டான்; கிழவன் தனக்குச் சொன்னது உண்மை என்று அறிந்து, மரத்தின்மேல் ஏற ஆரம்பித்தான். கமலியும் அதைப் பார்த்து அதிக சந்தோஷம் அடைந்து, தன் மகனைப் பார்த்து, "சுந்தரம், நீ சாப்பிட்டு இரண்டு நாள் ஆகின்றன. அதிக உயரத்தில் ஏற வேண்டாம். சமீபத்தில் இருக்கிற பழங்களைப் பறித்துக்கொண்டு கீழே இறங்கிவிடு," என்றாள்.

சுந்தரம், "சரி அம்மா," என்று சொல்லிக்கொண்டே மரத்தின்மேல் ஏறினான். அப்போது சுந்தரத்துக்குப் பழத்தின்மேல் ஆசை இல்லை; மரத்தின் உச்சிக்குப் போக ஆசை உண்டாயிற்று. அவன் நினைத்தபடியே இரண்டு மணி நேரத்தில், உச்சியை அடைந்தான்.

அவன் மேலே போனவுடனே வெகு அழகான ஓர் ஊரைக் கண்டான். அந்த ஊரில் மாமரங்கள் இல்லை; மனிதர்களும் இல்லை. ஆனால், சுந்தரம் வெகு தைரியத்தோடு அவ்வூரில் புகுந்து, ஒரு சாலையின் வழியாய்ப் போனான்.

அப்போது, "பையா, சற்று நில். உன்னோடு கொஞ்சம் பேச விரும்புகிறேன்," என்ற ஒரு சத்தம் அவன் காதில் விழுந்தது. அதைக் கேட்டு அவன் நாலு பக்கமும் சுற்றிப் பார்த்தான். அவனுக்கு எதிரில் வெகு அழகுள்ள ஒரு தேவதை தோன்றினாள். அவள் வெண்பட்டு உடுத்தி இருந்தாள்; உயர்ந்த ஆபரணங்கள் அணிந்து இருந்தாள். அவள், "சுந்தரம், நானே உன்னை இங்கு வரவழைத்தேன். உன் தகப்பனைப்பற்றி உனக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

பையன் உடனே நடுநடுங்கி, "அம்மணி, எனக்கு ஒன்றும் தெரியாது. என் தகப்பனுரைப் பற்றி என் தாயாரை அடிக்கடி கேட்பேன். அவர் ஒன்றும் பதில் சொல்லாமல் அழுவார். மறுபடி அவரைக் கேட்க என் மனம் துணிவது இல்லை," என்றான்.

அதைக் கேட்ட தேவதை, "நான் உன் தகப்பனைப்பற்றி விவரமாய்ச் சொல்லுகிறேன். ஆனால், அதற்கு முன் நீ ஒன்று செய்யவேண்டும்: அதாவது என் சொற்படி நடப்பதாய் நீ சத்தியம் செய்யவேண்டும். என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டாள்.

சுந்தரம் அதைக் கேட்டு, "தங்கள் இஷ்டப்படி நடக்கச் சித்தமாய் இருக்கிறேன். என்

தகப்பனுரைப் பற்றிச் சொல்லுங்கள் அம்மா," என்று வணக்கத்துடன் வேண்டினுன்.

இதைக் கேட்ட தேவதை, "உன் தகப்பன் ஒரு பெரிய ஆஸ்திவான். தரும சிந்தை உள்ளவன்; ஒரு நாள் கூட மற்றவருக்கு உபகாரம் செய்யாமல் இருக்கமாட்டான். தருமத்தில் அவனுக்குக் கர்ண மகாராஜனையே சமமாகச் சொல்லலாம். அவன் வாரந்தோறும் தவருமல் ஏழை ஜனங்களுக்குச் சாப்பாடு போடுவான். அவனுடைய தயாள குணமும், பரோபகாரமும் உலகமெங்கும் பரவின.

"இவைகளை அறிந்த இராக்ஷசன் ஒருவன் உன் தகப்பன்மேல் பொருமை கொண்டான். அவன் உன் தகப்பனை எப்படியாவது கொன்றுவிட்டு, ஆஸ்தியைக் கைப்பற்ற நினைத்தான். அவனுக்குத்தான் உன் தகப்பனைப்பற்றி நன்ருய்த் தெரியுமே! ஒரு நல்ல உபாயம்செய்தான். அவன் தன் மனைவியோடு உன் தகப்பன் வீட்டுக்கு வந்தான். அவன் தன் சொத்து எல்லாவற்றையும் பூகம்பத்தினுல் இழந்துவிட்டதாகச் சொன்னுன். சாப்பாட்டுக்கு இல்லாமல் பட்டினியாய்க் கிடந்து கஷ்டப்படுவதாகச் சொல்லிப் பாசாங்கு செய்தான்.

"உன் தகப்பன் அவன் பாசாங்கு செய்கிருன் என்று அறியாமல், இரக்கப்பட்டு, அவ-

னுக்கும் அவன் மனைவிக்கும் வேண்டிய உடுப்புகளைக் கொடுத்தான்; வயிறாரச்சாப்பாடு போட்டு, ஆதரித்து வந்தான். இப்படி ஒரு மாதம் கழிந்தது. ஒரு நாள் திடீரென்று பலமான காற்று ஒன்று அடித்தது. அதனால், அங்கு இருந்த பெரிய மரங்கள், பழைய வீடுகள் எல்லாம் விழுந்தன. பறவைகள் எல்லாம் தங்க இடம் இல்லாமல் தவித்தன. உன் தகப்பன் இருந்த இடம் கடற்கரைக்குச் சமீபமாய் இருந்தது. அங்குக் காற்று மிகவும் பலமாய் அடித்தது.

"அந்த அரக்கனிடத்தில் ஒரு தூரதிருஷ்டிக் கண்ணாடி இருந்தது. அவன், அதைக்கொண்டு வெகு தூரத்தில் மரங்கள் விழுவதைப் பார்த்துக் கொண்டு இருந்தான். அப்போது கடலில் சில கப்பல்கள் வழி தப்பிக் கஷ்ட தசையில் இருப்பதைக் கண்டான். உடனே அந்த இராக்ஷசன் உன் தகப்பனிடம் வந்து, "ஐயா, கடலில் சில கப்பல்கள் புயல் காற்றில் திசை தப்பி அபாய நிலைமையில் இருக்கின்றன. ஆகையால், தங்களுடைய வேலை ஆட்களை எல்லாம் உடனே அனுப்பிக் கப்பல்களில் உள்ளவர்களைக் காப்பாற்றும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்!" என்று இரக்கத்துடன் வேண்டினான்.

"உன் தந்தை உடனே எல்லா வேலைக்காரர்களையும் அனுப்பிவிடுவான்என்பது அவனுக்குத்

தெரியும். அவன் எதிர் பார்த்தபடியே, உன் பிதா சிறிது நேரத்தில் வேலைக்காரர் எல்லாரையும் அனுப்பிவிட்டான்; ஆனால், வாசல் காப்போனையும், உன் கைத்தாயையும் அனுப்பவில்லை. வேலைக்காரர் எல்லோரும் கடற்கரையை நோக்கிப் போனார்கள். அவர்கள் கண்ணுக்குத் தெரியாமல் போனவுடனே அந்தக் கொடியவன், "அன்னம் இட்டவர் வீட்டில் கன்னமிடக் கூடாது," என்பதை முற்றிலும் மறந்துவிட்டு, உன் தகப்பன்மேல் புலிபோல் பாய்ந்து, அவனைக் கத்தியால் குத்திக் கொன்றுவிட்டான். அது.............." என்றாள்.

உடனே சுந்தரம், "அப்படியா செய்தான் அந்தப் பாதகன்!" என்று உரக்கச் சொல்லிக்கொண்டு மூர்ச்சை அடைந்து கீழே விழுந்தான். சிறிது நேரத்திற்குள் மூர்ச்சை தெளிந்து எழுந்தான். சமீபத்தில் நின்ற தேவதை, "அப்பா, குழந்தாய், ஆத்திரப்படாதே. நான் சொல்வதை முழுவதும் பொறுமையாய்க் கேள். நீ துக்கப்பட்டு நடக்கிற காரியம் என்ன? தைரியமுள்ள குழந்தைக்கு வருத்தமே இருக்கக் கூடாது. பெரியோர், நன்மை வந்தாலும் சந்தோஷப்படமாட்டார்கள்; தீமை வந்தாலும் வருத்தப்படமாட்டார்கள். இதை நீ கேட்டதில்லையா? இனிமேல் செய்யவேண்டிய காரியத்தை நீ தைரிய-

மாய்ச் செய்," என்று சொல்லி, அவனைத் தைரி-யப்படுத்தினாள்.

பிறகு சுந்தரம் ஒருவாறு மனத்தைத் தைரி-யப்படுத்திக்கொண்டு, தேவதையைப் பார்த்து, "என் தாயாரே, பிறகு அந்தக் கொடும்பாவி என்ன செய்தான்? தயை செய்து விவரமாய்ச் சொல்லுங்கள்," என்று வேண்டிக்கொண்டான்.

அதற்கு அந்தத் தேவதை, "அது மாத்-திரமா? அவன் உன் தந்தையைக் கொன்றதோடு விட இல்லை; மற்ற இரண்டு வேலைக்காரர்களையும் கொன்றுவிட்டான். உன் தாயையும், உன்னையும் கூடக் கொல்ல ஓடி வந்தான்.

"அப்போது உன் தாய் நடுநடுங்கி, அவன் காலில் விழுந்து, 'ஓ! பெரியவரே, என்மேல் தயை செய்து என்னையும் என் குழந்தையையும் கொல்லவேண்டாம். நாங்கள் எங்கேயாவது ஓடிப்போய்விடுகிறோம்!' என்று கெஞ்சிக் கேட்-டுக் கொண்டாள்.

அந்தக் கொலைகாரன் அதைக் கேட்டு, "நான் உன் புருஷனைக் கொன்றேன் என்று உன் மகனுக்குச் சொல்லக்கூடாது. அப்படிச் செய்வ-தாக வாக்குக் கொடுத்தால், நான் உன்னையும், உன் பிள்ளையையும் கொல்லாமல் விட்டுவிடுகிறேன்," என்றான். அவள் அப்படியே வாக்குக் கொடுத்-தாள்.

"பிறகு இராக்ஷசன் உங்கள் இருவரையும் கொல்ல வில்லை; உன் பிதா தேடி வைத்திருந்த ஆஸ்தி எல்லாம் சேர்த்து எடுத்துக்கொண்டான்; உங்கள் வீட்டிற்கும் நெருப்பு வைத்தான். பிறகு வேலைக்காரர்கள் வருவதற்குள் தன் மனைவியை அழைத்துக்கொண்டு ஓடிப் போய்விட்டான்.

"அதற்குப் பிறகு உன அன்னை அங்கே இருக்கப் பயந்து, உன்னைத் தூக்கிக்கொண்டு பல காடு, மலை, ஆறுகள் எல்லாம் கடந்து, ஊர் ஊராய்த் திரிந்தாள்; முடிவில் இப்போது இருக்கிற குடிசைக்கு வந்து சேர்ந்தாள். அது முதற்கொண்டு அவள் சாப்பாட்டுக்குப் படும்பாடு கடவுளுக்குத்தான் தெரியும்; வாயால் சொல்லி முடியாது. இதுதான் உன்னுடைய விருத்தாந்தம்," என்று சொல்லி முடித்தாள்.

பிறகு சுந்தரம், "என் அன்னையாரே, இனிமேல் நான் செய்யவேண்டிய காரியத்தை நான் தைரியமாகச் செய்யவேண்டும் என்று சொன்னீர்களே! நான் செய்யவேண்டிய காரியம் என்ன? அதைச் சொன்னால், செய்யச் சித்தமாக இருக்கிறேன். அதையும் எனக்குச் சொல்லுங்கள்," என்று வேண்டினான்.

தேவதை, "நீங்கள் படுகிற இவ்வளவு கஷ்டத்துக்கும் காரணம் அந்த இராக்ஷசன்தான்.

அவனிடத்திலே சில பணப் பைகளும், ஒரு பஞ்ச வர்ணக் கிளியும், ஒரு வீணையும் இருக்கின்றன. நீ அவனிடமிருந்து அவைகளைக் கொண்டு வந்தால், மறுபடியும் உன் தகப்பனைப்போல நீயும் ஒரு பெரிய பணக்காரன் ஆவாய். உன்னை நல்ல நிலைமைக்குக் கொண்டு வர வேண்டும் என்றே நான் உன்னை அந்த மாங்கொட்டையை வாங்கச் செய்தேன். அந்த மாமரத்தை அவ்வளவு சீக்கிரமாயும், அவ்வளவு உயரமாயும் வளரும்படி செய்தவளும் நானே," என்றாள்.

சுந்தரம், உடனே, "அந்தப் பாவி எங்கே வசிக்கிறான்?" என்று படபடப்புடன் கேட்டான்.

தேவதை, "அவசரப்படாதே! பொறுமையாய் இரு. எல்லாம் உனக்குச் சொல்லவே நான் உன்னை இங்குச் சந்தித்தேன். நான் சொல்வதைக் கவனமாய்க் கேட்டு அதன்படி நட," என்று சொல்லி, "முதலில் அந்தப் பாவி உன் தகப்பனைக் கொன்றதற்காக நீ அவனைக் கொல்லவேண்டும். உன் தகப்பனைப்பற்றி உனக்குத் தெரிந்ததாக நீ உன் தாய்க்குச் சொல்லக் கூடாது. வேண்டுமானால் கடைசியில் சொல்லலாம். இப்போது இந்தச் சாலைவழியேநேராய்ப்போ. சிறிது தூரம் போன பிறகு, ஒரு சோலையைக் காண்பாய். அந்தச் சோலையில் பல விதமான பழ மரங்களும்,

புஷ்பச் செடிகளும் இருக்கும். அந்தச் சோலைக்குள் போ. அதன் நடுவில் ஒரு மாளிகை இருக்கும். அதில்தான் அந்தப் பாதகன் வசிக்கிறான். அங்கேபோய் உன் வேலையை முடித்துக்கொண்டு வா. ஒன்று மாத்திரம் ஞாபகத்தில் வைத்துக்கொள்: அதாவது, உனக்கு ஏதாவது கஷ்டம் ஏற்பட்டால், என்னை நினைத்துக்கொள். நான் வந்து உன் கஷ்டத்தைத் தீர்த்துவிடுவேன்," என்று சொன்னாள்.

சுந்தரம், "அப்படியே செய்கிறேன்," என்று சொல்லிவிட்டுத் தேவதை சொன்னபடியே அந்தச் சாலை வழியே போனான். அந்தத் தேவதை உடனே மின்னல்போல் மறைந்து போனாள்.

## 4. எதிர் பாராத அதிர்ஷ்டம்

பிறகு சுந்தரம் வெகு தூரம் நடந்து போய், விளக்கு வைக்கும் நேரத்தில், ஓர் அழகான தோட்டத்தைக் கண்டான்; நாலு பக்கமும் சுற்றிப் பார்த்தான்; தேவதை சொன்னபடியே தோட்டத்தின் நடுவில் அரண்மனை போன்ற ஒரு பெரிய மாளிகையைக் கண்டான்.

அதைக் கண்டவுடனே அவனுக்குச் சந்தோஷம் பொறுக்க முடியவில்லை. அந்த மாளிகை



149084 ... 600 008.

மூன்று மாடிகள் வைத்துக் கட்டப்பட்டு இருந்தது. மூன்ருவது மாடியில் அழகான நாற்காலிகளும், பல விதமான விளக்குகளும் விலையுயர்ந்த பட்டுத் திரைகளும், பித்தளைக் கட்டில்களும், கம்பளிகளும், இன்னும் அபூர்வமான பல சாமான்களும் இருந்தன. சுந்தரம் அவைகளை யெல்லாம் பார்த்து மிகவும் சந்தோஷப்பட்டான்.

அந்தச் சமயத்தில், அம்மாளிகையிலிருந்து ஒருத்தி வெளியே வந்தாள். அவள் பார்ப்பதற்கு விகாரமாய் இருந்தாள்; வாயை விட்டு வெளி வந்த சிங்கப் பல்லைக் காட்டிக்கொண்டு வெகு பயங்கரமான உருவத்தோடு வாயிற் படியில் நின்ருள். அவளைக் கண்டால், யாருக்கும் அச்சமாய்த்தான் இருக்கும். சுந்தரம் தைரியசாலி அல்லவா? ஆகையால், அவன் வெகு தைரியத்தோடு அவளிருந்த இடத்துக்குப் போஞன்.

உடனே அவள் அவனைப் பார்த்து, "நீ யாரப்பா? இங்கே வந்த வேலை என்ன?" என்று கேட்டாள். அதற்குச் சுந்தரம், "அம்மா, நான் ஓர் ஏழைப் பையன். வழி தெரியாமல் இங்கே வந்துவிட்டேன். இப்போது பொழுது போய்விட்டது; எங்கும் இருட்டாய் இருக்கிறது. என்ன செய்வேன் அம்மா? நீ தயை செய்து எனக்குக் கொஞ்சம் சாதம் போட்டுப் படுக்க இட-

மும் கொடுத்தால், புண்ணியம் உண்டு தாயே!" என்று கெஞ்சினன்.

இதைக் கேட்ட அந்த ஸ்திரீ, "ஐயோ! நான் அப்படிச் செய்யமாட்டேன்! என் புருஷர் இராக்ஷசர். அவருக்கு மனிதர்களைப் பிடித்துத் தின்பதில் அதிக ஆசை. இப்போது அவர் வெளியே போய் இருக்கிறார். அவர் இங்கே வந்தால், ஒரு நிமிஷமும் நீ உயிரோடு இருக்க முடியாது. உன்னை உடனே கொன்று தின்று பசியைத் தணித்துக்கொள்வார்," என்றுசொன்னள்.

சுந்தரம் இதைக் கேட்டவுடன் நடுங்கினன்; சற்றுநேரம் பேச்சு மூச்சு இல்லாமல் மரம்போல் அசையாமல் நின்றுவிட்டான். பிறகு மனத்தைத் தைரியப்படுத்திக் கொண்டு, "அம்மா, நீ எப்படியாவது இராத்திரிக்கு மாத்திரம் என்னை ஜாக்கிரதையாய்க் காப்பாற்ற வேண்டும். உன்னையே முற்றிலும் நம்பியிருக்கிறேன். நீ எப்படிச் செய்தாலும் செய்," என்று சொன்னன். இந்த வார்த்தைகளைக் கேட்டு யார்தான் இரக்கப்படாமல் இருப்பார்கள்?

அந்த இராக்ஷசி அவன் நிலைமையைப் பார்த்துப் பரிதாபப்பட்டுச் சுந்தரத்தை உள்ளே அழைத்துக்கொண்டு போனள். சுந்தரம் வீட்டுள் போனதும் விசாலமான கூடம் ஒன்றைப் பார்த்-

தான். அது வெகு அழகாய் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. உத்திரங்கள் எல்லாம் இரும்புத் தண்டவாளத்தால் செய்யப்பட்டவை. அவை-களின்மேல்பலவர்ணங்கள்பூசப்பட்டு இருந்தன. சுவர்கள் எல்லாம் கண்ணுடி போலப் பளபள வென்று பிரகாசித்தன. அவன் எந்தப் பக்கம் திரும்பினுலும், அவனைப்போலவே பிரதி பிம்பம் தெரிந்தது. தரையில் அநேக விதமான கம்பளங்-கள் விரித்து இருந்தன. பேர் போன அரசர்க-ளுடைய படங்கள் சுவரில் மாட்டி இருந்தன. இவைகளை எல்லாம் பார்த்துச் சுந்தரம் வெகு ஆச்சரியப்பட்டான்.

சுந்தரம் பிறந்தது முதல் இந்த மாதிரி மாளிகையைப் பார்த்து இருக்கவே மாட்டான் என்பதில் சந்தேகம் உண்டோ?

பின்பு அவன் வீட்டின் பின்பக்கம் போனுன் அங்கு முன் பார்த்ததுபோலவே வெகு நேர்த்தி-யான அநேக அறைகளைக் கண்டான். ஆனுல், அந்த அறைகளில் யாரையும் காணவில்லை; பின் புறத்தில் சிறைச்சாலையில் திருடர்களை அடைப்-பதுபோல் அநேகமனிதர்களை ஒரு பெரிய அறை யில் அடைத்து இருந்ததைப் பார்த்தான். இரா-க்ஷசன் அவர்களைத் தின்பதற்காக அடைத்து வைத்து இருக்கிருன் என்று தெரிந்துகொண்-டான்.

அந்த மனிதர்கள் போட்ட சத்தத்தைக் கேட்டுச் சிறிது பயந்தான்; அரக்கி தன்னையும் அதில் அடைக்கத்தான் கொண்டு போகிறளோ என்றும் சந்தேகித்தான்.

ஆனல் அவள் அவனைச் சமையல் அறைக்கு அழைத்துக்கொண்டு போனுள்; அவன் இஷ்டப்படி சாப்பாடுபோட்டாள். அவன் வெகு சந்தோஷமாய்ச் சாப்பிட்டான். அப்போது இடி இடித்ததுபோல ஒரு பேரிரைச்சல் வெளியில் கேட்டது. அதைக் கேட்ட சுந்தரம், பூகம்பந்தான் உண்டாய்விட்டதோ என்று நடுங்கினன்.

அந்தச் சமயத்தில் அவள், "இராக்ஷசர் வருகிறர்! இராக்ஷசர் வருகிறர்!! நீ அடுப்பங்கரையில் ஒளித்துக்கொள்!" என்று மெதுவாய்ச் சொன்னுள். உடனே சுந்தரம் அடுப்பங்கரையில் ஒளிந்துகொண்டான். சிறிது நேரத்தில் இராக்ஷசன் உள்ளே வந்தான்.

அவன் அதிக உயரமாய் இருந்தான். அவனுடைய ஒவ்வொரு காலும் ஒரு தூணைப்போல் இருந்தது. அவன் தாடி மயிர் தரையைத் தொட்டுக்கொண்டு இருந்தது. அவனைப்போல் நீங்கள் ஒருவனையும் பார்த்து இருக்கமாட்டீர்கள். இதற்குமேல் சொன்னல் நீங்கள் மிகவும் பயப்படுவீர்கள்.

அவன் உள்ளே வந்தவுடனே தன் மனைவி-யைப் பார்த்து, "வேறு மனிதர் வாசனை அடிக்-கிறதே! இங்கே யார் வந்து இருக்கிறார்கள்?" என்று கேட்டான்.

அவன் மனைவி, "உங்களுக்கு இராத்திரிச் சாப்பாடு தயாராய் இருக்கிறது. அதுதான் உங்-களுக்கு அப்படி வாசனை அடிக்கிறது," என்று பதில் சொன்னாள்.

இராக்ஷசன் தன் பெரிய நாற்காலியில் உட்-கார்ந்து சாப்பிட்டான். பிறகு தன் மனைவியைப் பார்த்து, 'பணப்பைகளைக்கொண்டுவா,' என்றான்.

அவன் மனைவி பணப் பைகளைக் கொண்டு வந்து மேஜையின்மேல் வைத்துவிட்டுப் போய்-விட்டாள். அம் மேஜை உங்கள் பள்ளிக்கூடத்-தில் இருக்கிற மேஜையைப்போல் இல்லை; அதை விடப் பத்து மடங்கு பெரியதாய் இருந்தது. அவன் சாப்பிட்ட வுடனே, பணப் பைகளில் இருந்த பணங்களைக் கொட்டி எண்ணினான். அப்படி எண்ணிக்கொண் டிருக்கையில் அவன் தூங்கிவிட்டான்.

இவற்றை எல்லாம் பார்த்த சுந்தரம் மெது-வாய் வெளியே வந்து, அந்தப் பணப் பைகளை நிரப்பி எடுத்துக்கொண்டு தான் வந்த வழியே விரைந்து ஓடினான்.

முடிவில் அவன் மாமரத்தின் நுனியண்டை வந்தான். பிறகு ஜாக்கிரதையாக அம்மரத்தின் வழியாகக் கீழே இறங்கித் தன் வீட்டை யடைந்-தான். அப்போது கமலிக்கு உண்டான சந்தோ-ஷத்தைக் கேட்கவும் வேண்டுமா ? ஆனால், சுந்-தரம் தன் தாய்க்கு இராக்ஷசனைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அவர்கள் அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு சுகமாக இருந்தார்கள்.

## 5. சுந்தரம் பஞ்ச வர்ணக் கிளியை அடைதல்

சில நாளைக்குப் பிறகு, சுந்தரம் மறுபடியும் மாமரத்தின்மேல் ஏறினான்; முன்போலவே இராக்ஷசன் வீட்டை அடைந்தான்; கதவைத் தட்டினான். பிறகு இராக்ஷசி வந்து கதவைத் திறந்தாள்.

சுந்தரம் அவளைப் பார்த்து, "அம்மா, எனக்கு மிகவும் பசி எடுக்கிறது. தயை செய்து கொஞ்சம் ஆகாரம் கொடுக்கவேண்டும்," என்று சொன்னான்.

அவள் அதைக் கேட்டு, "அப்பா, அது முடியாது. முன் தடவை நீ இங்கே வந்து இருந்தபோது என் புருஷர் பணப்பைகளைப் போக்கடித்தார். நீ இங்கே இருக்க முடியாது. எங்கேயாவது ஓடிப்போ," என்றாள்.

சுந்தரம் உடனே, "ஓ! அப்படியா? நீ என்னை உள்ளே அழைத்துக்கொண்டு போய்க் கொஞ்சம் ஆகாரம் கொடு. பணப்பையை நான் கண்டு பிடித்துக் கொடுக்கிறேன்," என்று சொன்ஞன்.

அவள் சந்தோஷப்பட்டு, அவனை உள்ளே அழைத்துப் போனாள். அப்போது இராக்ஷசன் வருகிற சத்தம் கேட்டது. அதனால், சுந்தரம் சாப்பிடவில்லை; சமையல் அறையில் ஒளிந்துகொண்டான்.

இராக்ஷசன்வழக்கம்போல வந்து, சாப்பிட்டு விட்டுத் தன் மனைவியைக் கூப்பிட்டு, "என் பஞ்ச வர்ணக் கிளியைக் கொண்டுவா," என்றான். அவள் அப்படியே கொண்டு வந்து கொடுத்தாள்.

அவன் அதை நோக்கி, "கிளியே, சுகமா?" என்றான். அந்தக் கிளி, "நான் சௌக்கியமாய் இருக்கிறேன். நீர் வெளியே போனீரே! என்ன விசேஷம்?" என்றது. அது அப்படிக் கேட்ட போது அதன் வாயிலிருந்து ஒரு சிகப்புக் கல் (இரத்தினம்) கீழே விழுந்தது. பிறகு அவன் சிறிதுநேரம் அதனோடு பேசிக்கொண்டு இருந்தான்; பின்பு தூங்கிவிட்டான்.

அப்போது சுந்தரம் அந்தப் பஞ்சவர்ணக் கிளியை எடுத்துக்கொண்டு முன்போல் வீட்டுக்கு ஓடி வந்துவிட்டான்.

வந்தவுடனே, அந்தக் கிளியைப் பார்த்து, "ஓ கிளியே, நீ சுகமா?" என்றான். அதற்கு அந்தக் கிளி, "சுகந்தான்!" என்று வருத்தத்தோடு சொன்னது. அப்போது அதன் வாயிலிருந்து ஓர் இரத்தினம் கீழே விழுந்தது. அதை அவன் தாய் பார்த்து மிகவும் சந்தோஷப்பட்டாள். பிறகு அவன் அந்த மாதிரி அக்கிளியினிடமிருந்து கிடைத்த கற்களை விற்றுப் பெரிய பணக்காரன் ஆனான்.

---

## 6. தைரியம் ஜயம் அளிக்கும்

---

இது இப்படி இருக்க, இராக்ஷசன் விழித்துக்கொண்டு, கிளியைக் காணாமல் மிகவும் வருத்தப்பட்டான். அப்போது அவன் மனைவி சுந்தரத்தைப் பற்றி அவனுக்குச் சொல்லி, அவனேகிளியைத்திருடிக்கொண்டுபோய் இருப்பான் என்றும் சொன்னாள். இராக்ஷசன் அதைக் கேட்டுப் பேசாமல் இருந்து விட்டான்.

சில காலம் சென்றபின், சுந்தரம் பின்னும் ஒரு தரம் மாமரத்தில் ஏறிப்போகத் தன் தாயை உத்தரவு கேட்டான். அவள், "அப்பா, குழந்தாய், நீ இனிமேல் எங்கும் போகவேண்டாம். நமக்கு வேண்டிய பணம் இருக்கிறது. இதை

வைத்துக்கொண்டு நாம் சுகமாய் இருக்கலாம். நீ கஷ்டப்படாதே! 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து,' என்று சொன்னாள். அதைச் சுந்தரம் கொஞ்சமும் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. அவன் இராக்ஷசன் வீட்டுக்குப் போகப் புறப்பட்டான். இராத்திரி ஏழு மணிக்கு அங்கே போய்ச் சேர்ந்தான்.

அப்போது கதவு திறந்து இருந்தது. அதனால் இராக்ஷசிக்குங் கூடத் தெரியாமல் திருட்டுத்தனமாய் அவன் உள்ளே போனான். ஆனால், அப்போதுமுன்போல் அடுப்பங்கரையில் ஒளிந்துகொள்ளவில்லை; அங்கே இருந்த ஒரு நெல் குதிருக்குள் மறைந்துகொண்டான்.

சில நிமிஷங்களுக்குப் பிறகு இராக்ஷசன் வந்தான்; வந்தவுடனே, "வேறு மனிதர் வாசனை அடிக்கிறதே! யார் இங்கே இருக்கிறார்கள்?" என்று தன் மனைவியைக் கேட்டான்.

மனைவி, "எனக்குங்கூட அப்படித்தான் அடிக்கிறது! முன்னே நம்மிடத்தில் இருந்த பணப்பைகளையும், பஞ்சவர்ணக் கிளியையும் திருடிக்கொண்டு போன சுத்தரந்தான் இங்கு வந்திருக்கின்றான் என்று நினைக்கிறேன்! அவன் சமையல் அறையில் இருப்பான்," என்றாள்.

உடனே இராக்ஷசன் அடுப்பங்கரையிடம் வேகமாய்ப்போனான்; எங்கும் பார்த்தான். ஆனால், சுந்தரத்தைக் கண்டு பிடிக்க அவனால் முடியவில்லை. ஏன் என்றால் அவன்குதிருக்குள்சென்று பார்க்கவில்லை.

இராக்ஷசன் வழக்கப்படி சாப்பிட்டான்; பிறகு மனைவியை யழைத்துத் தன் தம்பூரைக் கொண்டுவரச் சொன்னான். அவன் மனைவி தம்பூரைக் கொண்டு வந்து மேஜைமேல் வைத்துவிட்டுப் போனாள். இராக்ஷசன் அதனோடு கொஞ்சநேரம் பேசிக்கொண்டு இருந்தான்; பிறகு அதைப் பார்த்து, "ஐந்து நிமிஷம் பாடுவாயா?" என்று கேட்டான். தம்பூரு வெகு இனிமையாகப் பாட ஆரம்பித்தது. அதனால், இராக்ஷசன் அப்படியே தூங்கிவிட்டான். அந்தச் சமயம் பார்த்துச் சுந்தரம் குதிரிலிருந்து சத்தம் செய்யாமல் வெளியே வந்தான்; தம்பூரைத் தூக்கிக்கொண்டு ஓடினான். அப்போது தம்பூரு, "ஐயோ! என்னை யாரோ திருடன் தூக்கிக்கொண்டு போகிறானே!" என்று உரக்கச் சத்தம் செய்தது.

அந்தச் சத்தத்தைக் கேட்டு, இராக்ஷசன் விழித்துக்கொண்டான்; ஒரு பையன் தம்பூரைத் தூக்கிக்கொண்டு ஓடுவதைப் பார்த்தான்; அவனைத் துரத்திக்கொண்டு ஓடினான். ஓடியும் பிர-

யோஜனம் இல்லை. ஏன் என்றால், சுந்தரம் மாமரத்தின் வழியாய் வெகு விரைவாய்க் கீழே இறங்கிவிட்டான்; பிறகு மேலே பார்த்தான். இராக்ஷசனும் கீழே இறங்கி வந்துகொண்டு இருந்தான்.

அதைப் பாாத்துப் பயந்து சுந்தரம் தேவதையை நினைத்துக்கொண்டான். உடனே அந்தப் பெரிய மாமரம் மடமடவென்று முறிந்து கீழே விழுந்தது. இராக்ஷசன் தலை கீழாக விழுந்து இறந்தான். 'கெடுவான் கேடு நினைப்பான்' என்னும் பழமொழி பொய்யாகுமோ?

பிறகு சுந்தரம் எல்லாவற்றையும் விவரமாகத் தன் தாய்க்குச் சொன்னான். அவன் தாயும் அவனுடைய தைரியத்தையறிந்து அவனை மெச்சினாள். சுந்தரத்தின் தைரியத்தைக் கேட்ட ஒரு ஜமீன்தார் தம்முடைய பெண்ணை அவனுக்குக் கலியாணம் பண்ணிக் கொடுத்தார். சுந்தரம் தன் மனைவியோடும் தாயோடும் சுகமாக வெகு காலம் வாழ்ந்து இருந்தான். ஆதலால், தைரியமே ஜயம். தைரியத்தை ஒருபோதும் கைவிடக் கூடாது.

முற்றிற்று.

# அறிவுரை

அறம் செய விரும்பு.

ஆறுவது சினம்.

இயல்வது கரவேல்.

ஈவது விலக்கேல்.

உடையது விளம்பேல்.

ஊக்கமது கைவிடேல்.

எண் எழுத்து இகழேல்.

ஏற்பது இகழ்ச்சி.

ஐயம் இட்டு உண்.

ஒப்புரவு ஒழுகு.

ஓதுவது ஒழியேல்.

ஔவியம் பேசேல்.

Printed at Tirupati Sri Mahant's Press, Madras.

149084